முற்பகல் 11–45

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) சம்பளம் வேண்டாமா? உட்காருங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய. . . (குறுக்கீடுகள்)*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர் குறிப்பிட்டது எதுவும் அவைக் குறிப்பிற்கு வராது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி,*

“2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டமுன்வடிவு அறிமுகம்தானே! (குறுக்கீடுகள்) சட்டமுன்வடிவு அறிமுகம் செய்கிறார். என்ன நீங்கள் சம்பளம் வேண்டாம் என்று சொல்லப் போகிறீர்களா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்* announce *செய்யும்போது அன்றையதினம் நீங்கள் இதன்மீது ஏதாவது சொல்லியிருக்கலாம். இப்பொழுது* Bill *அறிமுகம் செய்கிற நேரத்தில். . . (குறுக்கீடு) கைதட்டி அன்றைக்கு*

2018 ஜனவரி 10] [பேரவைத் தலைவர்]

வரவேற்றீர்கள். கைதட்டி அன்றைக்கு வரவேற்றுவிட்டு, இன்றைக்கு சட்டமுன்வடிவை அறிமுக நிலையில் எதிர்க்கிறீர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, சொல்லுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றியெல்லாம் நேற்றைக்கு நாம் பேசி முடித்துவிட்டோம். அதை நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இது Bill. இந்த Bill–ன்மீது ஏதாவது கருத்து இருந்தால் சொல்லுங்கள். ஏற்கெனவே announcement செய்து, நீங்கள் அதற்கு நல்ல வரவேற்பு கொடுத்தீர்கள். (குறுக்கீடு) இந்த Bill–ஐ வரவேற்று அன்றைக்கு பேசாமல் இருந்தீர்கள். சம்பளம் உயர்த்த வேண்டுமென்று நீங்களே கேட்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் announce செய்ததற்கு இன்று Bill வருகிறது. அவ்வளவுதான். சட்டமுன்வடிவு வருகிறது. (குறுக்கீடு)

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் வேறு ஒன்றும் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சக்கரபாணி அவர்களே, இந்த Bill சம்பந்தமாக உங்களது கருத்து ஏதாவது இருந்தால், ஆய்வு சமயத்தில் நீங்கள் சொன்னால் நான் கேட்டுக்கொள்கிறேன். நான் பதிவு செய்துகொள்கிறேன். ஆனால் இந்த சட்டமுன்வடிவை நீங்கள் ஆதரிக்கப் போகிறீர்களா? எதிர்க்கிறீர்களா? அதை மட்டும் சொல்லிவிட்டு உட்காருங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கும், இதற்கும் முடிச்சுப் போடவேண்டாம். (குறுக்கீடு) அதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். நீங்கள் சட்டமுன்வடிவை ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா? இரண்டில் ஒன்று சொல்லுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆரம்ப நிலையிலேயே இதை நான் எதிர்க்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வளவுதான். விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) இருங்கள். இருங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.